NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 30 September 2026

# மாணவர்களின் பெற்றோர் மனப்போக்கில் மாற்றம் தேவை: ஆய்வு




என்யுஎஸ்எஸ் கென்ட் ரிட்ஜ் கில்ட் ஹவுஸில் நடைபெற்ற ஐபிஎஸ் 'பெற்றோரும் கல்வியும் 2026' கருத்தரங்கின் குழு கலந்துரையாடலில் பங்கேற்ற பேச்சாளர்கள். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

**யோகிதா அன்புச்செழியன்**

சிங்கப்பூரில் பெற்றோரின் கல்வி சார்ந்த எதிர்பார்ப்புகள் கூடிவரும் வேளையில், பிள்ளைகளின் கல்விச்சுமை குடும்பங்களில் தொடர் சவாலாக இருந்து வருவதாகக் கொள்கை ஆய்வுக் கழகம் (ஐபிஎஸ்) நடத்திய புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வின் முடிவுகளை ஆராயும் வகையில் ஐபிஎஸ் ஏற்பாடு செய்த 'பெற்றோரும் கல்வியும் 2026' சிறப்புச் கருத்தரங்கு, என்யுஎஸ்எஸ் கென்ட் ரிட்ஜ் கில்ட் ஹவுசில் செவ்வாய்க்கிழமை (செப்டம்பர் 29) நடைபெற்றது.

ஐபிஎஸ் தலைமை ஆய்வு அதிகாரி டாக்டர் மேத்யூ மேத்யூஸ் நிகழ்ச்சியில் தொடக்க உரையாற்றினார்.

கிட்டத்தட்ட 1,500 சிங்கப்பூர்ப் பெற்றோரிடம் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவுகளைப் பகிர்ந்துகொண்ட அவர், 84 விழுக்காட்டுப் பெற்றோர் நற்பண்புகளுக்கு முதன்மை முக்கியத்துவம் அளித்தாலும், 88 விழுக்காட்டினர் கல்வி சார்ந்த மன அழுத்தத்தைச் சந்திப்பதாகத் தெரிவித்தார்.

"பெற்றோரிடையே போட்டி மனப்பான்மையும் எதிர்பார்ப்புகளும் அதிகரிக்கும் சூழலில், கல்வித்துறையின் அழுத்தங்களை மட்டும் குறைப்பது போதுமானதாக இருக்காது," என்று அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற குழுக் கலந்துரையாடலை ஐபிஎஸ் துணை இயக்குநரும் லீ குவான் யூ பொதுக் கொள்கைப் பள்ளியின் முதன்மைப் பேராசிரியருமான ஏரோன் மணியம் வழிநடத்தினார்.

சமூக உளவியல் நிலையத்தின் முதன்மை மருத்துவ உளவியலாளரும் மூத்த உதவி இயக்குநருமான முனைவர் குவா சா ஹான், 'மம்ஸ்@வர்க் சிங்கப்பூர்' அமைப்பின் நிறுவனர் ஷெர்-லி டோரி, சிங்கப்பூர் தொழில்நுட்பக் கழக இணைத் துணைவேந்தர் இணைப் பேராசிரியர் இந்தான் அஸ¯ரா மொக்தார், டாக்டர் மேத்யூ மேத்யூஸ் ஆகிய நால்வரும் இதில் பேச்சாளர்களாகப் பங்கேற்றனர்.

கல்வியில் கல்விச் சிறப்பும் வாழ்வியல் திறன்களும் என இருவேறு முரண்பட்ட இலக்குகளையும் சமநிலையுடன் நிர்வகிக்க வேண்டிய 'இரட்டை நிலைகள்' குறித்துப் பேராசிரியர் ஏரோன் பேசினார். இவை ஒரே முடிவின் மூலம் தீர்வு காணப்பட வேண்டிய சிக்கல்கள் அல்ல என்றும் காலப்போக்கில் தொடர்ச்சியாக நிர்வகிக்கப்பட வேண்டிய சவால்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பெற்றோர் தங்களது மனநலனில் முதலில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்று முனைவர் குவா வலியுறுத்தினார்.

"விமானத்தில் அவசரநிலை ஏற்படும்போது மற்றவர்களுக்கு உதவும் முன் நமக்கு உயிர்வாயுக் கவசத்தை முதலில் அணிவதுபோல, பெற்றோர் தங்கள் மன அழுத்தத்தை முதலில் கையாண்டால் மட்டுமே பிள்ளைகளுக்கு அமைதியான சூழலை உருவாக்க முடியும்," என்று அவர் கூறினார்.

yogitaa@sph.com.sg

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.